என்று கடிதங்கள் பெற்று அவற்றை அனுப்பியுள்ளனர் இக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள் சரியானவையா என்று பரிசீலிக்கப்படுகிறது.

அடிசன் கம்பெனி லிமிடெட் நிர்வாகம் கீழ்க்கண்ட ஆறு தொழிலாளர்களைச் சட்ட விரோதமான வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுதல், நிர்வாகத்தினரைப் பயமுறுத்தல், நிறுவனத்தின் சொத்தை சேதப் படுத்துதல் ஆகிய குற்றங்களுக்காக வேலை நீக்கம் செய்தது.

1. திரு. மோகன்.
2. திரு. ஸ்ரீதரன்.
3. திரு. சங்கரலிங்கம்.
4. திரு. தசரதன்.
5. திரு. ஏகாம்பரம்.
6. திரு. சங்கரன்.

மேற்சொன்ன 6 தொழிலாளர்களுடைய வேலை நீக்கத்தை ஆட்சேபித்து சில அலுவலர்களைத் தாக்கிய குற்றத்திற்காகக் கீழ்க்கண்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

1. திரு. முனுசாமி.
2. திரு. சுப்பிரமணியம்.
3. திரு. மணி.
4. திரு. கந்தசாமி.

வேலை நீக்கம் செய்யப்பட்ட பத்து தொழிலாளர்களில் திரு. கந்தசாமி என்பவர் கணக்குத் தீர்த்துக் கொண்டு சென்றுவிட்டார். மீதமுள்ள 9 தொழிலாளர்கள் சென்னை–2வது தொழிலாளர் துறை அலுவலரிடம் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2 (ஏ) யின் கீழ் மனுச் செய்துள்ளனர். இத்தொழிற் தகராறுகள், விசாரணையில் இருந்து வருகின்றன.

இந்தக் கட்டத்தில் 18—1—1973 அன்று திரு. முத்துகிருஷ்ணன் என்னும் தொழிலாளியை பிரில் தயார் செய்யும் இயந்திரம் ஒன்றிலிருந்து அது போன்ற மற்றொரு இயந்திரத்தில் உற்பத்தியின் அவசியத்தை ஒட்டி வேலை செய்யக் கோரியதை அவர் மறுத்தார். அதன்பேரில் அவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து சிம்சன் அண்டு குரூப் கம்பெனிஸ் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இதன் விளைவாக நிறுவனம் முழுவதும் இயங்காமல் நின்று விட்டது. 24—1—1973, 25—1—1973 தினங்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நிறுவனத்தில் உள்ள தொலை பேசிகள், கண்ணாடி ஜன்னல்கள், முக்கியமான தஸ்தாவேஜுகள், சில இயந்திரங்களின் சில பாகங்கள் இவற்றைத் தாக்கி பலத்த சேதம் விளைவித்ததாக நிர்வாகத்தினர் கூறி, 25—1—1973 அன்று முதல் கதவடைப்புச் செய்தனர். 2—2—1973 அன்று சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் நிறுவனத்திற்குச் சென்று சேதத்தினால் ஏற்பட்ட நிலைமையைப் பார்வையிட்டு சேதம் நடந்தது பெரும்பாலும் உண்மை யென்று அறிக்கை அனுப்பியுள்ளார்.